ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2017.08.01 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - மே 2017

### பொதுநோக்கு

நாட்டிற்கான 11ஆவது பன்னாட்டு முறி வழங்கல்களிலிருந்தான வருவாய்கள் மற்றும் 2017 மேயில் கிடைக்கப்பெற்ற குழுநிலைக் கடன் வசதி போன்றவற்றின் மூலம் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களால் இலங்கையின் வெளிநாட்டுத் துறை வலுவடைந்தது. இவ் உட்பாய்ச்சல்கள், 2017 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 5.0 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகளினை 2017 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனானதொரு அதிகரிப்பினை தோற்றுவித்தது. இலங்கை பொருளாதாரத்தின் மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கையானது அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை போன்றவற்றின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள் மூலம் தொடர்ந்தும் மிதப்பாகக் காணப்பட்டது. எனினும், வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைதல் மற்றும் சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள் மெதுவடைதல் போன்றவற்றின் மூலம் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மேமாத காலப்பகுதியில் ஒரு கலப்பு செயலாற்றத்தினைக் காட்டியது. தொடர்ச்சியான மூன்றாவது மாதமாக ஏற்றுமதி அதிகரித்துக் காணப்பட்டமைக்கு மத்தியிலும், இறக்குமதி செலவினத்திலான உயர்ந்தளவு அதிகரிப்பு வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவாக்கத்தினை மேலும் தோற்றுவித்தது. ஒட்டுமொத்தமாக, முதலீட்டாளர்களின் சாதகமான உணர்திறன்கள் மூலமாக நிதியியல் கணக்கின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கின் ஓர் படிப்படியான மீள் சமநிலைப்படுத்தல் போன்றவை 2017இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுத் துறையில் சாதகமான தாக்கத்தினை கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏற்றுமதிச் செயலாற்றம்**

2017 மாச்சு வரை அவதானிக்கப்பட்ட ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான அதிகரித்த போக்கின் தொடர்ச்சியாக, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 மேயில் தொடர்ச்சியான மூன்றாவது மாதமாகவும் விரிவடைந்தது. இதன்படி, 2017 மேயில் ஏற்றுமதி வருவாய்கள் தொடர்பான முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 780 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 841 மில்லியனுக்கு 7.8 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த அதிகரிப்புக்கான மிகப்பெரிய பங்களிப்பாக வேளாண்மையிலிருந்தான ஏற்றுமதிகளைத் தொடர்ந்து கைத்தொழில் ஏற்றுமதிகள் காணப்பட்டன.

தெங்கு உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய அனைத்து வேளாண்மை பொருட்களின் உயர்ந்தளவான ஏற்றுமதிகளின் காரணமாக, 2017 மேயில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 223 மில்லியனாக காணப்பட்டு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 32.0 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் உயர்ந்தளவான விலைகள் மற்றும் அதிகரித்த அறிவு போன்றவற்றின் காரணமாக ஐ.அ.டொலர் 132 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 45.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் பிரதிபலிக்கப்பட்ட தேயிலைக்கான உயர்ந்தளவான விலைகள் காரணமாக தேயிலைக்கான சராசரி ஏற்றுமதி விலையானது 2016 மேயில் காணப்பட்ட கிலோகிராமொன்றுக்கான ஐ.அ.டொலர் 4.24 உடன் ஒப்பிடுகையில் 2017 மேயில் கிலோகிராமொன்றுக்கு ஐ.அ.டொலர் 5.41 ஆக அதிகரித்தது. மேலும், தேயிலை ஏற்றுமதிக்கான அளவானது 2016 ஒத்தோபர் வரை அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கினை எதிர்மறையாக்கி (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 14.3 சதவீதத்தால் அதிகரித்தது. ஐரோப்பிய சந்தைகளுக்கான கடற்றொழில் உற்பத்தி ஏற்றுமதிகளுக்கான தடை நீங்கங்களிலிருந்தான நன்மைகளின் காரணமாக, கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 மேயில் ஐ.அ.டொலர் 18 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 40.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், கராம்பு மற்றும் கறுவா போன்றவற்றின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலித்து 21.9 சதவீத வளர்ச்சியொன்றினை பதிவுசெய்தது.

2017 மேயில், கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 615 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 1.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்றவற்றின் உயர்ந்தளவான ஏற்றுமதிகளே காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் எண்ணெய் குதங்கள் மற்றும் வான் எரிபொருட்களின் உயர்ந்தளவான ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகள் போன்றவற்றினைப் பிரதிபலித்து 2017 மேயில் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 63.8 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மேலும், இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 மேயில் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 17.5 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு பிரதானமாக இறப்பர் டயர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகளின் கணிசமமான வளர்ச்சியே காரணமாகும். அடிப்படை உலோகங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இரும்பு, உருக்கு மற்றும் ஆபரணங்கள் மற்றும் கருவிகள் போன்றவை தவிர்ந்த அனைத்து துணை வகைகளின் வளர்ச்சியினைப் பிரதிபலித்து (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 73.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மேலும், மரம் மற்றும் கடதாசி உற்பத்திகள் மற்றும் உணவு, குடிவகை மற்றும் புகையிலை போன்றவற்றிலிருந்தான வருவாய்களும் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 மேயில் ஐ.அ.டொலர் 359 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளிலான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இரத்தினக்கல், வைரம் மற்றும் ஆபரணங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவற்றிலிருந்தான வருவாய்களும் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மே 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | மே 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - மே 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - மே 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **608.0** | **614.5** | **1.1** | **3,321.5** | **3,316.0** | **(0.2)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 374.7 | 359.2 | (4.1) | 2,084.5 | 1,985.5 | (4.7) |
| இதில் ஆடைகள் | 356.3 | 337.7 | (5.2) | 1,969.7 | 1,869.3 | (5.1) |
| இறப்பர் உற்பத்திகள் | 57.1 | 67.0 | 17.5 | 308.7 | 315.5 | 2.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 16.9 | 27.6 | 63.8 | 109.2 | 147.7 | 35.3 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 27.9 | 30.5 | 9.3 | 145.3 | 131.9 | (9.2) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 27.7 | 22.3 | (19.4) | 126.5 | 103.3 | (18.4) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.0 | 4.3 | (38.2) | 59.5 | 70.7 | 18.7 |
| மரம் மற்றும் கடதாசி உற்பத்திகள் | 8.3 | 11.1 | 33.0 | 45.8 | 56.4 | 23.2 |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 5.4 | 9.3 | 73.3 | 29.2 | 44.6 | 52.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.5 | 1.0 | (32.6) | 8.1 | 13.8 | 70.1 |
| இரசாயன உற்பத்திகள் | 2.7 | 2.3 | (12.6) | 14.3 | 12.8 | (10.4) |
| ஏனையவை | 78.8 | 79.7 | 1.1 | 390.4 | 433.8 | 11.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **168.7** | **222.7** | **32.0** | **890.5** | **1,074.4** | **20.6** |
| தேயிலை | 90.2 | 131.6 | 45.9 | 496.5 | 589.8 | 18.8 |
| தேங்காய் | 27.9 | 27.9 | 0.0 | 142.7 | 143.7 | 0.7 |
| வாசனைத்திரவியம் | 19.4 | 23.7 | 21.9 | 93.4 | 132.9 | 42.3 |
| கடலுணவு | 12.6 | 17.7 | 40.5 | 70.5 | 101.9 | 44.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.8 | 13.0 | 20.8 | 46.9 | 58.3 | 24.5 |
| இறப்பர் | 2.5 | 2.9 | 14.6 | 15.1 | 21.9 | 44.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.0 | 3.1 | 4.2 | 14.4 | 13.5 | (5.9) |
| மரக்கறிகள் | 2.4 | 2.8 | 17.3 | 11.1 | 12.4 | 11.9 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.4** | **4.1** | **19.7** | **17.7** | **19.9** | **12.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **780.1** | **841.2** | **7.8** | **4,229.7** | **4,410.2** | **4.3** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஐந்துமாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தேயிலை, வாசனைத்திரவியங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கடலுணவு போன்றவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருமானத்தின் விளைவாக ஐ.அ.டொலர் 4,410 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 4.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் உணவு, குடிவகை மற்றும் புகையிலை போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

2017இன் சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏறுுமதிகளில் ஏறத்தாழ 51 சதவீதத்திற்கு வகைகூறின.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2017 மேயில், இறக்குமதிகள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 1,727 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 8.6 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதிகளுக்கான உயர்ந்தளவான கேள்வியைப் பிரதிபலித்தது.

2017 மேயில், நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 386 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 17.5 சதவீதத்தால் அதிகரித்தமையானது குறிப்பாக உணவு மற்றும் குடிவகைகளில், சீனி மற்றும் அரிசியின் உயர்ந்தளவான இறக்குமதிகளால் உந்தப்பட்டது. உள்நாட்டு சந்தையில் காணப்படும் பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்காக அரிசி இறக்குமதிகளை ஊக்குவிக்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக, 2017 சனவரியில் அவதானிக்கப்பட்ட அரிசி இறக்குமதிகளின் அதிகரித்த போக்கு 2017 மேயிலும் தொடர்ந்து காணப்பட்டது. இதன்படி 2017 மேயில் இறக்குமதி அளவானது 2016 மேயில் காணப்பட்ட 4 மில்லியன் கிலோகிராமிலிருந்து 34 மில்லியன் கிலோகிராமிற்கு அதிகரித்தமையின் காரணமாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினங்கள் பத்து மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்தது. மேலும், 2017 மேயில், சீனி மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 38 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 167.6 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு உயர்ந்தளவான இறக்குமதிகளும் விலைகளுமே காரணமாகும். மேலும், தொலைத்தொடர்புக் கருவிகள், ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள், ஊர்திகள் மற்றும் மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் போன்ற உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினங்களும் 2017 மேயில் அதிகரித்தது.

2017 மேயில், முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்கள் ஐ.அ.டொலர் 427 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 4.5 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு போக்குவரத்துச் சாதனங்கள் உயர்ந்தளவான இறக்குமதிகளே வழிவகுத்தன. போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதி செலவினங்கள் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 28.3 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு பிரதானமாக வானூர்தி பாகங்கள் மற்றும் வீதி ஊர்திகள் போன்றவை மீதான உயர்ந்தளவான ஏற்றுமதிகளே காரணமாகும். மேலும், 2017 மேயில், பொறி மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் 2.2 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், இக்காலப் பகுதியில் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு இரசாயன உற்பத்திகள் மற்றும் இரும்பு மற்றும் உருக்கிலான ஆபரணங்கள் போன்றவற்றின் குறைந்தளவான இறக்குமதிகளே காரணமாகும்.

2017 மேயில், இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 865 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 1.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெரும்பாலும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான உயர்ந்தளவான செலவினங்களே காரணமாகும். சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி போன்றவற்றின் இறக்குமதியளவுகள் குறைந்தளவு காணப்பட்ட போதிலும், எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 15.3 சதவீதத்தால் அதிகரித்தது. அனைத்து எரிபொருள் வகைகளின் சராசரி இறக்குமதி விலைகளின் அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 2017 மேயில், மசகெண்ணெய்க்கான விலையானது 2016 மேயில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 48.84 இலிருந்து ஐ.அ.டொலர் 51.66 இற்கு அதிகரித்தது. மேலும், கோதுமை மற்றும் சோளம் போன்றவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினமானது விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கு மத்தியிலும் உயர்ந்தளவான இறக்குமதிகளின் காரணமாக 73.7 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், 2017 மேயில் இரசாயனப் பொருட்கள், இறப்பர், ஆபரணங்களும் அதன் பகுதிகளும் மற்றும் வளமாக்கி போன்றவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | மே 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | மே 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - மே 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - மே 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **328.1** | **385.6** | **17.5** | **1,753.6** | **1,901.2** | **8.4** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 121.5 | 162.9 | 34.1 | 638.3 | 792.1 | 24.1 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 14.3 | 38.2 | 166.5 | 108.7 | 124.7 | 14.8 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.3 | 16.0 | 594.1 | 9.2 | 130.5 | 1,313.6 |
| பால் உற்பத்திகள் | 23.0 | 26.5 | 15.4 | 97.1 | 136.9 | 41.1 |
| மரக்கறிகள் | 25.4 | 25.4 | (0.2) | 165.5 | 149.7 | (9.6) |
| குடிபானங்கள் | 7.6 | 7.1 | (6.3) | 33.3 | 32.9 | (1.3) |
| வாசனைத் திரவியங்கள் | 11.3 | 10.4 | (8.1) | 56.3 | 43.4 | (22.9) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 37.5 | 39.4 | 5.0 | 168.2 | 173.9 | 3.4 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 206.7 | 222.7 | 7.7 | 1,115.3 | 1,109.1 | (0.6) |
| ஊர்திகள் | 63.5 | 68.0 | 7.0 | 362.4 | 316.2 | (12.8) |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 16.6 | 24.8 | 49.6 | 97.1 | 117.1 | 20.6 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 39.6 | 42.0 | 6.0 | 211.2 | 203.8 | (3.5) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 87.0 | 87.9 | 1.1 | 444.6 | 472.1 | 6.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **851.4** | **864.7** | **1.6** | **3,870.7** | **4,556.9** | **17.7** |
| எரிபொருள் | 187.1 | 215.7 | 15.3 | 873.6 | 1,423.9 | 63.0 |
| இதில் மசகெண்ணெய் | 33.4 | 36.2 | 8.2 | 159.9 | 243.8 | 52.5 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 152.3 | 179.4 | 17.8 | 617.4 | 1,009.3 | 63.5 |
| நிலக்கரி | 1.4 | 0.1 | (95.7) | 96.4 | 170.8 | 77.3 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 49.0 | 46.5 | (5.1) | 168.8 | 271.2 | 60.6 |
| இதில் தங்கம் | 38.5 | 35.8 | (6.8) | 113.2 | 229.0 | 102.2 |
| கோதுமை மற்றும் சோளம் | 21.5 | 37.4 | 73.7 | 127.1 | 155.2 | 22.1 |
| வேளாண்மையும் உள்ளீடுகளும் | 11.9 | 20.5 | 72.7 | 72.2 | 77.2 | 6.9 |
| கனிம உற்பத்திகள் | 15.9 | 24.3 | 53.0 | 67.7 | 78.8 | 16.4 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 22.3 | 29.5 | 32.4 | 97.3 | 128.2 | 31.7 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 234.6 | 227.3 | (3.1) | 1,131.3 | 1,087.9 | (3.8) |
| வளமாக்கி | 14.3 | 4.5 | (68.7) | 68.4 | 27.1 | (60.4) |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 43.6 | 30.2 | (30.8) | 123.3 | 121.7 | (1.3) |
| இரசாயன உற்பத்திகள் | 84.4 | 66.9 | (20.7) | 365.5 | 341.1 | (6.7) |
| ஏனையவை | 166.7 | 161.8 | (2.9) | 775.3 | 844.6 | 8.9 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **408.8** | **427.3** | **4.5** | **2,016.7** | **2,041.9** | **1.3** |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 49.0 | 62.9 | 28.3 | 244.1 | 278.1 | 13.9 |
| பொறிகள் மற்றும் கருவிகள் | 222.0 | 226.9 | 2.2 | 1,147.2 | 1,098.8 | (4.2) |
| கட்டடப் பொருட்கள் | 137.5 | 137.0 | (0.3) | 622.8 | 661.1 | 6.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.3 | 0.4 | 36.0 | 2.6 | 3.9 | 51.4 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.4** | **49.2** | **3,329.0** | **4.3** | **110.1** | **2,489.3** |
| **மொத்த இறக்குமதி** | **1,589.8** | **1,726.8** | **8.6** | **7,645.2** | **8,610.1** | **12.6** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 8,610 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 12.6 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு எரிபொருள், அரிசி மற்றும் தங்கம் போன்றவற்றின் உயர்ந்தளவான இறக்குமதிகளே பெரிதும் காரணமாகும். கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எரிபொருள் மற்றும் தங்கம் போன்றவற்றின் இறக்குமதிச் செலவினங்கள் முறையே (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 63.0 சதவீதத்தினாலும் 102.2 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில், அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் இருபது மடங்கிற்கு மேலாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எனினும், 2017இன் முதல் ஐந்துமாத காலப்பகுதியில், பொறி மற்றும் உபகரணம், தனிப்பட்ட ஊர்திகள் மற்றும் ஆடைகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் போன்றவற்றின் மீதான இறக்குமதி செலவினங்கள் வீழ்ச்சியடைந்தன.

2017இன் சனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு வகைகூறின.

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**வர்த்தக நிலுவை**

2017 மேயில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 மேயின் ஐ.அ.டொலர் 810 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 886 மில்லியனுக்கு விரிவடைந்தது. 2017இன் முதல் ஐந்து மாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,415 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,200 மில்லியனுக்கு அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2017 மேயில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் இம்மாத காலப்பகுதியில் 121,891 சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு விளக்கி இக்காலப் பகுதியின் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 51.4 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் ஒரேமாதிரியான போக்கினைத் தொடர்ந்து 2017, மே காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான[1] வருகைகள் ஐ.அ.டொலர் 209.1 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும் ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஐ.அ.டொலர் 1,521.9 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தால் அதிகரித்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் நிலைமைகளின் காரணமாக, 2017 மேயில் தொடர்ச்சியான மூன்றாவது மாதமாக தொழிலாளர் பணவனுப்பல்கள்

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

வீழ்ச்சியடைந்தது. 2017 மேயில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 575.4 மில்லியனுக்கு 3.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக, 2017இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,797.0 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2017 மேயில், இலங்கை அதன் 11ஆவது நாட்டுக்கான பன்னாட்டு முறியினை 10 வருட முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய ஐ.அ.டொலர் 1.5 பில்லியனை வழங்கியது. இம்மாத காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் ஐ.அ.டொலர் 450 மில்லியன் பெறுமதியான கூட்டுக் கடனினையும் பெற்றது. அத்தகைய நிதியியல் கணக்கிற்கான வருமானங்கள் நாட்டின் சென்மதி நிலுவையினை பலப்படுத்துவதற்கு உதவின. மேலும், ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 127.8 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 63.2 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கி ஐ.அ.டொலர் 191.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. முன்னைய இரு மாதங்களில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு தொடர்ச்சியாக, 2017 மே காலப்பகுதியின் அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 109.8 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. இருப்பினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஐந்துமாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை ஐ.அ.டொலர் 250.6 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சல்களைக் கொண்டுள்ளது. 2017இன் முதல் நான்குமாத காலப்பகுதியில் குழு நிலைக் கடன் வருவாய்கள் உள்ளடங்கலாக அரசிற்கான நீண்டகாலக் கடன்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 64.2 மில்லியனான தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 567.5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017இன் முதல் ஐந்துமாத காலப்பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,142.4 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,586.6 மில்லியன் கொண்ட மேலதிகத்தினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணிவீத அசைவுகளும்**

2017 மே இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் குழு நிலைக்கடன் வசதிகள் போன்றவற்றின் வருவாய்கள் மூலம் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக அதிகரித்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.0 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 5.2 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016 இறுதியிலிருந்து 2017 யூலை 31வரையான ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.6 சதவீதத்தினால் மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 12.5 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுனுக்கெதிராக 8.8 சதவீதத்தினாலும் யப்பானியயென்னுக்கெதிராக 7.6 சதவீதத்தினாலும்

கனேடியடொலருக்கெதிராக 9.9 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலியடொலருக்கெதிராக 11.6 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 8.0 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

**அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு** (அ)

| வகை | ஏப்பிறல் 2016 ஐ.அ.டொ. மில் | ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன -ஏப்பி 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஏப்பி 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 780.1(ஆ) | 841.2 | 7.8 | 4,229.7(ஆ) | 4,410.2 | 4.3 |
| இறக்குமதிகள் | 1, 589.8 | 1, 726.8 | 8.6 | 7,645.2 | 8,610.1 | 12.6 |
| வர்த்தக மீதி (தேறிய) | -809.7 (ஆ) | -885.6 | - | -3,415.5(ஆ) | -4,199.9 | - |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 214.5 (ஆ) | 209.1 | -2.5 | 1,451.8 (ஆ) | 1,521.9 | 4.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 597.2 | 575.4 | -3.7 | 2,968.6 | 2,797.0 | -5.8 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -17.8 | 34.7 | - | -37.3 | 191.1 | - |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 300.2 (ஆ) | 2,252.0 | 650.2 | 837.6 (ஆ) | 3,040.3 | 263.0 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 189.7 | 186.8 | -1.6 | 407.4 | 572.0 | 40.4 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | 1,500 | - | - | 1,500 | - |
| நீண்ட காலக் கடன்கள் | - | 450.0 | - | - | 450.0 | - |
| குறுங்காலக் கடன்கள் | 109.8(ஆ) | 115.2 | 5.0 | 419.4(ஆ) | 510.4 | 21.7 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 129.4 | 146.5 | 13.2 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கையின் முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.